**<u>அவசரகூட்டம்</u>**

**2022ம் ஆண்டு ஏப்ரல் 11ம் தேதி திங்கள்கிழமை 4.00 மணிக்கு கோட்டக்குப்பம் நகராட்சியில் அவசரகூட்டம் நகர் மன்ற தலைவர் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.**

**முன்னிலை .திரு. ச.ஜெயமூர்த்தி, நகர் மன்ற தலைவர், கோட்டக்குப்பம் நகராட்சி**

**பொருள் எண். 01**

தமிழக அரசால் அமைக்கப்பட்ட சொத்துவரி சீராய்வு செய்வதற்கான குழு பல்வேறு காரணிகளை ஆராய்ந்து தற்போது சொத்துவரி சீராய்வு செய்வது அவசியம் என அரசிற்கு பரிந்துரை செய்துள்ளது.

15–ஆவது மத்திய நிதி ஆணையம், 2022–2023–ம் ஆண்டு முதல் உள்ளாட்சி அமைப்புகளுக்கான மான்யம் பெறுவதற்கு, மொத்த ஆண்டு மதிப்பில் சொத்துவரி விகிதம் (Floor rate i.e .Rate of Taxation) எவ்வளவு என அறிவிக்கை வெளியிட வேண்டும் எனவும், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கு ஏற்றவாறு சொத்து வரி வசூலில் முன்னேற்றம் காண்பிக்க வேண்டும் எனவும் நிபந்தனைகள் விதித்துள்ளது. மேலும், தூய்மை இந்தியா திட்டம் 2.0 மற்றும் அம்ரூட் 2.0 ஆகிய திட்டங்களுக்கு மானிய நிதி பெறுவதற்கு சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வது அவசியமாகிறது.

அரசாணை(நிலை)எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.07.2018 மற்றும் அரசாணை(நிலை) எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.26.07.2018 ஆகியவற்றில் சொத்து வரி/ காலிமனைவரி பொது சீராய்வு மேற்கொள்ள ஆணையிடப்பட்டு, பின்பு அரசாணை(நிலை)எண்.150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.19.11.2019–ன் படி சொத்து வரி சீராய்வானது நிறுத்தி வைக்கப்பட்டு, சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள் வழங்க குழுவும் அமைக்கப்பட்டது. மேலும், இக்குழுவானது சொத்து வரி/ காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான பரிந்துரைகள் வழங்குவதற்கு முன்பு, சந்தை மதிப்பு குறியீடு, பணவீக்கம், செலவு பணவீக்க குறியீடு, மொத்த உள்நாட்டு உற்பத்தி போன்றவற்றை பரிசீலித்து, பொருளாதார குறியீடுகள் உயர்ந்துள்ள நிலையில் சொத்து வரியில் எந்த உயர்வும் இல்லாததோடு, உள்ளாட்சி அமைப்புகளின் சொந்த வருமானத்திலும் எந்த உயர்வும் இல்லாமல் உள்ளதாகவும், மொத்த வருமானத்தில் சொந்த வருமானத்தின் பங்கு பெருமளவு குறைந்துள்ளதாகவும் அறிக்கை வெளியிட்டுள்ளது.

தற்போது பொருளாதார குறியீடு உயர்ந்துள்ளதற்கு ஏற்ப, நகராட்சிகளின் நிர்வாக செலவினம் பலமடங்கு உயர்ந்துள்ளது. மேலும், நகராட்சிகளில் அதிகரித்துள்ள நிதித்தேவை, பொது மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய அடிப்படை வசதிகள், 15வது மத்திய நிதிக்குழுவின் மான்யம் மற்றும் இதர ஒன்றிய அரசின் திட்டங்களுக்கான நிதி பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தகுதிகள் போன்றவற்றை கருத்திற்கொண்டும் தமிழ்நாட்டிலுள்ள நகராட்சிகளில்

கீழ்க்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி சீராய்வு செய்யலாம் என சொத்து வரி சீராய்வு மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல் குழு பரிந்துரைத்துள்ளது.

சொத்து வரி / காலிமனை வரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் வளர்ச்சிக்கு தேவைப்படும் நிதி ஆகியவற்றை கருத்திற்கொண்டு 2022–2023 முதலாம் அரையாண்டு (01.04.2022) முதல் சொத்து வரி பொது சீராய்வு செய்ய வேண்டும்.

நகராட்சிப் பகுதிகளில் கட்டப்படும் குடியிருப்பு கட்டடங்களுக்கு அவற்றின் அமைவிடம், கட்டுமானத்தின் தன்மை மற்றும் பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் கட்டடங்களின் பரப்பளவுக்கு ஏற்றவாறு 4 வகைகளாக பிரித்து வெவ்வேறு மண்டல மதிப்புகள் நிர்ணயம் செய்து சொத்து வரி / காலிமனைவரி சீராய்வு செய்ய வேண்டும்.

சொத்து வரி/காலிமனைவரி சீராய்வு செய்வதற்கான குழுவின் பரிந்துரைகள் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அரசாணை (நிலை) எண்.52 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள் 30.03.2022 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் கீழ்கண்டவாறு அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>சொத்துவரி:</u>**

| வ.எண் | மண்டலம் | தற்போழுது உள்ள மண்டல மதிப்பு சதுர அடிக்கு ரூ. |
|---|---|---|
| 1 | A | 0.70 பைசா |
| 2 | B | 0.50 பைசா |
| 3 | C | 0.30 பைசா |

**குடியிருப்பு கட்டடங்கள்(Residential Building) :**

| பரப்பளவு (ச.அடி) | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| <=600 | 1.25 |
| 601–1200 | 1.5 |
| 1201–1800 | 1.75 |
| >1800 | 2 |

**குடியிருப்பு அல்லாத கட்டடங்கள்(Non–Residential Building) :**

| வகைப்பாடு | உயர்வு செய்வதற்கானகாரணி |
|---|---|
| தொழிற்சாலைகள் | 1.75 |
| வணிக பயன்பாட்டு கட்டடங்கள் | 2 |
| சுயநிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்கள் | 1.75 |

**மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்வது சம்மந்தமாக மேற்கண்ட பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள உயர்வு காரணிகள் கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது:**

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

3) 1201 முதல் 1800 சதுர அடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

5) வணிகப் பயன்பாட்டு கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யப்படவேண்டும்.

**காலிமனை வரி சீராய்வு:**

| வ.எண் | மண்டலம் | தற்போழுது உள்ள மண்டல மதிப்பு சதுர அடிக்கு |
|---|---|---|
| 1 | A | 0.25 பைசா |
| 2 | B | 0.25 பைசா |
| 3 | C | 0.25 பைசா |

காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யப்பட வேண்டும். மேலும், சொத்து வரிவிதிப்பு செய்யும் போது கட்டடத்தின் பரப்பளவிற்கு இரண்டு மடங்கிற்கு மேல் உள்ள காலியிடத்திற்கு சொத்து வரியுடன் சேர்த்து காலிமனை வரி வரிவிதிப்பு செய்யப்பட வேண்டும்.

**தன்னிச்சையான வருடாந்திர சொத்துவரி சீராய்வு:**

ஏற்கனவே உள்ள சொத்துவரி / காலிமனை வரியில், ஆண்டு தோறும் 6% உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யப்பட வேண்டும்.

அதுபோலவே, தற்போது வரை மண்டல அடிப்படை மதிப்பு நிர்ணயம் செய்யப்படாமல் விடுபட்டுள்ள சாலைகள், தெருக்கள், சந்துகள் போன்றவை அவற்றின் அமைவிடங்களுக்கு ஏற்றவாறு பட்டியலிட்டு மண்டலங்களும், மண்டல மதிப்புகளும் நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

மேலும் கோட்டக்குப்பம் நகராட்சியில் தற்போதுள்ள நிலையில் கீழ்கண்டவாறு கடன் தொகை / நிதித்தேவை உள்ளது.

| வ. எண். | செலவின வகைப்பாடு | தற்போதுள்ள நிலையில் தேவைப்படும் நிதி (Current Liabilities) (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1 | செலுத்தப்பட வேண்டிய நிலுவை மின் கட்டணம் | 20.51 (இலட்சம்) |

| | | |
|---|---|---|
| 2 | பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை விபரம் | 6.79 (இலட்சம்) |
| 3 | திரும்ப செலுத்த வேண்டிய கடன் நிலுவை விபரம் ( டுபிட்கோ, டுபிசெல், பிற) | – |
| 4 | பணியாளர்களுக்கு வழங்கப்படவேண்டிய ஓய்வுக்கால பணப்பயன், ஓய்வூதியம் மற்றும் தற்போது பணிபுரியும் பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய சேமநல நிதி , நகராட்சியின் பங்குத்தொகை மற்றும் பிற பணப்பயன்கள் ( நிலுவைத் தொகை) | 18.93 (இலட்சம்) |
| **மொத்தம்** | | 46.23 (இலட்சம்) |

விலைவாசி உயர்வு, பணியாளர்களின் ஊதிய உயர்வு, பொதுமக்களுக்கு செய்ய வேண்டிய அடிப்படை தேவை மற்றும் நகராட்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை கட்டமைப்புகளை மேம்படுத்தி பராமரிப்பு செய்தல் போன்றவற்றிற்கு தேவைப்படும் கூடுதல் செலவினம், நகராட்சி செலுத்த வேண்டிய கடன் தொகை மற்றும் பிற துறைகளுக்கு செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை ஆகியவற்றை கருத்தில் கொண்டும், பொதுமக்களுக்கு சிறப்பான சேவைகளை அளிக்க ஏதுவாகவும், மேற்கண்ட அரசாணையில் அறிவுறுத்தியுள்ளவாறும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920, பிரிவு 81–A மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை, ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.01.04.2022 ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறைகள் பின்பற்றியும், கோட்டக்குப்பம் நகராட்சியில் கீழ்கண்டவாறு சொத்து வரி/காலிமனைவரி உயர்வு செய்து பொது சீராய்வு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

1) 600 சதுரஅடிக்கும் குறைவான பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 25% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

2) 601 முதல் 1200 சதுரஅடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 50% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

3) 1201 முதல் 1800 சதுரடி வரை பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

4) 1800 சதுர அடிக்கு அதிகமாக பரப்பளவு உள்ள குடியிருப்பு கட்டடங்களுக்கு 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

5) வணிகப் பயன்பாட்டுக் கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்து வரியில் 100% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

6) தொழிற்சாலை பயன்பாட்டு கட்டடம் மற்றும் சுய நிதி பள்ளி மற்றும் கல்லூரி கட்டடங்களுக்கு தற்போதுள்ள சொத்துவரியில் 75% சொத்துவரி உயர்வு செய்யலாம்.

7) காலிமனை வரிவிதிப்பிற்கு, 1 சதுர அடி நிலத்திற்கு தற்போதுள்ள அடிப்படை மதிப்பு 100 சதவீதம் உயர்வு செய்து காலிமனை வரி பொது சீராய்வு செய்யலாம்.

8) ஏற்கனவே உள்ள சொத்துவரி/காலிமனைவரியில், ஆண்டுதோறும் 6% உயர்வு அல்லது கடந்த 5 ஆண்டுகளின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் (GSDP) சராசரி வளர்ச்சி வீதம் இவற்றில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சொத்துவரி / காலிமனை வரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு செய்யலாம்.

மேலும் தற்போது கோட்டக்குப்பம் நகராட்சியில் உள்ள தெருக்கள் / சாலைகள் /சந்துகள் ஆகியவற்றிற்கு மண்டல அடிப்படை மதிப்பு கீழ்கண்டவாறு மண்டலங்கள் நிர்ணயம் செய்யலாம்.

| வ. எண் | வார்டு எண் | தெரு பெயர்கள் | மண்டலம் |
|---|---|---|---|
| 1 | WD-01 | திவான் கந்தப்பா நகர் (தெற்கு) | B |
| 2 | WD-01 | திவான் கந்தப்பா நகர் (தெற்கு) 1வது தெரு | B |
| 3 | WD-01 | திவான் கந்தப்பா நகர் (தெற்கு) 2வது தெரு | B |
| 4 | WD-01 | திவான் கந்தப்பா நகர் (தெற்கு) 3வது தெரு | B |
| 5 | WD-01 | திவான் கந்தப்பா நகர் (தெற்கு) 4வது தெரு | B |
| 6 | WD-01 | திவான் கந்தப்பா நகர் (தெற்கு) 5வது தெரு | B |
| 7 | WD-01 | திவான் கந்தப்பா நகர் (தெற்கு) 6வது தெரு | B |
| 8 | WD-01 | திவான் கந்தப்பா நகர் (தெற்கு) 7வது தெரு | B |
| 9 | WD-01 | திவான் கந்தப்பா நகர் பாலமுருகன் கோயில் தெரு | B |
| 10 | WD-01 | திவான் கந்தப்பா நகர் (தெற்கு) 2வது மெயின் | B |
| 11 | WD-01 | ஆரோவில் ரோடு | A |
| 12 | WD-02 | திவான் கந்தப்பாக நகர் (வடக்கு) | B |
| 13 | WD-02 | திவான் கந்தப்பாக நகர் (வடக்கு) 1 முதல் 3 வரை | B |
| 14 | WD-02 | பாரதி நகர் 1வது தெரு | B |
| 15 | WD-02 | பாரதி நகர் 2வது தெரு | B |
| 16 | WD-02 | பாரதி நகர் 3வது தெரு | B |
| 17 | WD-02 | பாரதி நகர் 4வது தெரு | B |
| 18 | WD-02 | பாரதி நகர் 5வது தெரு | B |
| 19 | WD-02 | பாரதி நகர் 6வது தெரு | B |
| 20 | WD-02 | பாரதி நகர் 7வது தெரு | B |
| 21 | WD-02 | பாரதி நகர் 8வது தெரு | B |
| 22 | WD-02 | ஈசிஆர் மெயின் ரோடு | A |
| 23 | WD-02 | பழைய பட்டணம் பாதை | B |
| 24 | WD-02 | பஜனை கோயில் தெரு | B |
| 25 | WD-02 | மேற்கு தெரு | B |

| | | | |
|---|---|---|---|
| 26 | WD-02 | வடக்கு தெரு | B |
| 27 | WD-03 | பழைய பட்டணம் பாதை | B |
| 28 | WD-03 | குளத்து தெரு | B |
| 29 | WD-03 | மாரியம்மன் கோயில் தெரு | C |
| 30 | WD-03 | அய்யனார் கோயில் தெரு | C |
| 31 | WD-03 | அரிசன காலனி மாரியம்மன் கோயில் தெரு (ம) குறுக்கு தெரு | C |
| 32 | WD-03 | அண்ணா நகர் 1வது தெரு | B |
| 33 | WD-03 | அண்ணா நகர் 2வது தெரு | B |
| 34 | WD-03 | அண்ணா நகர் 3வது தெரு | B |
| 35 | WD-03 | அண்ணா நகர் 4வது தெரு | B |
| 36 | WD-03 | அண்ணா நகர் 5வது தெரு | B |
| 37 | WD-04 | சின்னமுதலியார் சாவடி தெற்கு தெரு | B |
| 38 | WD-04 | சின்னமுதலியார் சாவடி செங்கோணியம்மன் தெரு | B |
| 39 | WD-04 | சின்னமுதலியார் சாவடி குப்பம் | B |
| 40 | WD-04 | சின்ன முதலியார் சாவடிகுப்பம் மெயின் ரோடு | B |
| 41 | WD-04 | சின்னமுதலியார் சாவடி வடக்கு தெரு –1 | B |
| 42 | WD-04 | சின்னமுதலியார் சாவடி வடக்கு தெரு 2 | B |
| 43 | WD-05 | சின்ன முதலியார் சாவடி மாரியம்மன் கோயில் தெரு | B |
| 44 | WD-05 | காளியம்மன் கோயில் தெரு | B |
| 45 | WD-05 | குறுக்கு தெரு | B |
| 46 | WD-05 | பள்ளத் தெரு | B |
| 47 | WD-05 | ஈசிஆர் மெயின் ரோடு | A |
| 48 | WD-05 | மேட்டுத் தெரு | B |
| 49 | WD-05 | புத்துகோயில் தெரு –1 | B |
| 50 | WD-05 | புத்துக் கோயில் தெரு –2 | B |
| 51 | WD-05 | புத்துக் கோயில் தெரு –3 | B |
| 52 | WD-05 | ராஜீவ் நகர்–1 1,2,3 வரை மொத்தம் – 3 | B |
| 53 | WD-05 | ராஜீவ் நகர் –2 1,2 வரை மொத்தம் – 2 | B |
| 54 | WD-05 | சுனாமி குடியிருப்பு | B |
| 55 | WD-06 | சின்ன முதலியார் சாவடி ஜெயமுத்து மாரியம்மன் கோயில் தெரு | C |
| 56 | WD-06 | சின்ன முதலியார் சாவடி ஒத்தவாடை தெரு | C |
| 57 | WD-06 | எம்.ஜி.ஆர் நகர் 1வது தெரு | B |
| 58 | WD-06 | எம்.ஜி.ஆர் நகர் 2வது தெரு | B |
| 59 | WD-06 | எம்.ஜி.ஆர் நகர் 3வது தெரு | B |
| 60 | WD-06 | எம்.ஜி.ஆர் நகர் 4வது தெரு | B |
| 61 | WD-06 | கட்டபொம்மன் வீதி | B |

| | | | |
|---|---|---|---|
| 62 | WD-06 | நேரு வீதி | B |
| 63 | WD-06 | முல்லை தெரு | B |
| 64 | WD-06 | தீப்பாஞ்சம்மன் கோயில் தெரு | B |
| 65 | WD-07 | காயிதேமில்லத் தெரு | B |
| 66 | WD-07 | பள்ளிவாசல் தெரு | B |
| 67 | WD-07 | இந்திரா நகர் | B |
| 68 | WD-07 | இந்திரா நகர் பழைய பட்டணம் பாதை | B |
| 69 | WD-07 | லைலத்துல் வீதி | B |
| 70 | WD-07 | வ.உ.சி வீதி | B |
| 71 | WD-07 | ஜின்னா வீதி | B |
| 72 | WD-07 | தந்திராயன்குப்பம் பாதை | B |
| 73 | WD-07 | தந்திராயன்குப்பம் சுனாமி குடியிருப்பு | B |
| 74 | WD-07 | தந்திராயன்குப்பம் வடக்கு (ம) தெற்கு | B |
| 75 | WD-07 | சுதாகர் பீச் நகர் 1 முதல் 7வரை | B |
| 76 | WD-08 | காமராஜர் வீதி | B |
| 77 | WD-08 | தந்தைபெரியார் தெரு | B |
| 78 | WD-08 | லெனின் வீதி | B |
| 79 | WD-08 | அறிஞர் அண்ணா வீதி | B |
| 80 | WD-08 | திருவள்ளுவர் வீதி | B |
| 81 | WD-08 | பாரதி நகர் | B |
| 82 | WD-08 | மதர்சா தெரு (மாமல்லன் தெரு) | B |
| 83 | WD-08 | ராதா கிருஷ்ணன் நகர் | B |
| 84 | WD-08 | தென்னந்தோப்பு | B |
| 85 | WD-08 | ஈசிஆர் மெயின் ரோடு | A |
| 86 | WD-08 | கோட்டைமேடு மெயின் ரோடு | B |
| 87 | WD-08 | கோட்டைமேடு மாரியம்மன் கோயில் தெரு | B |
| 88 | WD-08 | புறாத்தோப்பு அக்பர் வீதி | B |
| 89 | WD-08 | கோட்டைமேடு ஒத்தவாடை தெரு | B |
| 90 | WD-09 | நிர்வானா பள்ளி | B |
| 91 | WD-09 | செம்மண்குட்டை–பாரதி நகர் 1 முதல் 7 வரை | B |
| 92 | WD-09 | பழைய பட்டணம் பாதை | B |
| 93 | WD-09 | நடுக்குப்பம் | B |
| 94 | WD-09 | நடுக்குப்பம் மேகாத்தம்மன் கோயில் தெரு | B |
| 95 | WD-09 | நடுக்குப்பம் தெற்கு தெரு | B |
| 96 | WD-09 | நடுக்குப்பம்  வடக்கு தெரு | B |
| 97 | WD-09 | நடுக்குப்பம் பாதை | B |

| | | | |
|---|---|---|---|
| 98 | WD-10 | ரெட்டைமலை சீனிவாசன் தெரு | C |
| 99 | WD-10 | மாரியம்மன் கோயில் தெரு | C |
| 100 | WD-10 | பள்ளிகூடம் பின்புறம் | C |
| 101 | WD-11 | பழைய பட்டணம் பாதை | C |
| 102 | WD-11 | ஜாகீர் உசேன் தெரு | C |
| 103 | WD-11 | கோட்டைவாயில் வீதி | C |
| 104 | WD-11 | அம்பேத்கார் தெரு | C |
| 105 | WD-11 | மாரியம்மன் கோயில் பின்புறம் | C |
| 106 | WD-12 | ஜமியத் நகர் 1வது தெரு | B |
| 107 | WD-12 | ஜமியத் நகர் 2வது தெரு | B |
| 108 | WD-12 | ஜமியத் நகர் 3வது தெரு | B |
| 109 | WD-12 | ஜமியத் நகர் 4வது தெரு | B |
| 110 | WD-12 | ஜமியத் நகர் 5வது தெரு | B |
| 111 | WD-12 | ஜமியத் நகர் 6வது தெரு | B |
| 112 | WD-12 | ஜமியத் நகர் 7வது தெரு | B |
| 113 | WD-12 | ஜமியத் நகர் 8வது தெரு | B |
| 114 | WD-12 | ஜமியத் நகர் மெயின்ரோடு | B |
| 115 | WD-12 | அபிஷேக் நகர் 1 முதல் 3வது தெரு | B |
| 116 | WD-12 | அபிஷேக் நகர் 4 முதல் 7வது தெரு | B |
| 117 | WD-12 | அபிஷேக் நகர் மெயின்ரோடு | B |
| 118 | WD-12 | அம்ருதா கார்டன் | B |
| 119 | WD-12 | விஸ்வநாதன் நகர் | B |
| 120 | WD-12 | பள்ளிவாசல் விரிவாக்கம் | B |
| 121 | WD-12 | தௌலத் நகர் | B |
| 122 | WD-12 | சமரசம் நகர் | B |
| 123 | WD-13 | பச்சைவாழியம்மன் நகர் | B |
| 124 | WD-13 | பச்சைவாழியம்மன் கோயில் மெயின்ரோடு | B |
| 125 | WD-13 | பச்சைவாழியம்மன்கோயில் தெரு 1முதல் 4வது தெரு | B |
| 126 | WD-13 | பழைய ஆரோவில் ரோடு | B |
| 127 | WD-13 | ஆதிதிராவிடர் காலனி | C |
| 128 | WD-13 | அம்பேத்கார் தெரு | C |
| 129 | WD-13 | இருளர் காலனி | C |
| 130 | WD-13 | சத்யா நகர் மெயின்ரோடு | C |
| 131 | WD-13 | சத்யா நகர் 1வது தெரு | C |
| 132 | WD-13 | சத்யா நகர் 2வது தெரு | C |
| 133 | WD-13 | சத்யா நகர் 3வது தெரு | C |
| 134 | WD-13 | சத்யா நகர் 4வது தெரு | C |
| 135 | WD-13 | சத்யா நகர் குறுக்கு தெரு | C |
| 136 | WD-13 | நேதாஜி நகர் | B |

| | | | |
|---|---|---|---|
| 137 | WD-13 | வேதபுரீஸ்வரர் நகர் | B |
| 138 | WD-13 | ஆரோ சன் சிட்டி | B |
| 139 | WD-14 | சுப்ரமணியபுரம் | B |
| 140 | WD-14 | தோப்பு தெரு | B |
| 141 | WD-14 | வண்ணாரத் தெரு 1வது குறுக்கு தெரு | B |
| 142 | WD-14 | வண்ணாரத் தெரு 2வது குறுக்கு தெரு | B |
| 143 | WD-14 | கன்னியம்மன்கோயில் தெரு | B |
| 144 | WD-15 | காந்திரோடு, (பர்கத் நகர் டேங்க் ரோடு தொடக்கம் முதல் ரவுண்டானா வரை) | A |
| 145 | WD-15 | காந்திரோடு கிழக்கு | A |
| 146 | WD-15 | அய்யுப் கார்டன் | B |
| 147 | WD-15 | ஹாக்கிம் நாட்டாண்மைகார தெரு | A |
| 148 | WD-15 | பர்கத் நகர் 1வது தெரு | A |
| 149 | WD-15 | பர்கத் நகர் விரிவாக்கம் | A |
| 150 | WD-15 | பர்கத் நகர் 7வது தெரு | A |
| 151 | WD-15 | பர்கத் நகர் 9வது தெரு | A |
| 152 | WD-16 | பழைய பட்டிணம் பாதை | A |
| 153 | WD-16 | பள்ளி தெரு | B |
| 154 | WD-16 | தேரோடும் வீதி | B |
| 155 | WD-16 | புதுத் தெரு 1 வது தெரு | B |
| 156 | WD-16 | புதுத்தெரு 2 வது தெரு | B |
| 157 | WD-16 | புதுத்தெரு 3 வது தெரு | B |
| 158 | WD-16 | புதுத்தெரு 4 வது தெரு | B |
| 159 | WD-16 | புதுத்தெரு 5 வது தெரு | B |
| 160 | WD-16 | லத்தீப் நகர் | B |
| 161 | WD-17 | பஜார் தெரு | B |
| 162 | WD-17 | மாமூலப்பை தெரு | B |
| 163 | WD-17 | வேங்கை தெரு | B |
| 164 | WD-17 | ரகுமான் நகர் | B |
| 165 | WD-18 | பெரியதெரு | B |
| 166 | WD-18 | ஷாஜிமஹால் தெரு | B |
| 167 | WD-18 | பள்ளிவாசல் தெரு | B |
| 168 | WD-18 | காஜியார் தெரு | B |
| 169 | WD-18 | பழைய பட்டிணம் பாதை | B |
| 170 | WD-18 | கோயில் மேடு | B |
| 171 | WD-19 | தைக்கால் தெரு | B |
| 172 | WD-19 | ஆசாத் தெரு | B |
| 173 | WD-19 | பழைய பட்டிணம் பாதை | B |
| 174 | WD-19 | மோர்சார் தெரு | B |
| 175 | WD-19 | நாட்டாண்மைகார தெரு | B |
| 176 | WD-19 | குட்டவாப்பு தெரு | B |

| | | | |
|---|---|---|---|
| 177 | WD-20 | அணைக்குடியார் தெரு | B |
| 178 | WD-20 | ஹாஜி உசேன் தெரு | B |
| 179 | WD-20 | ரஹமத் நகர் சிராஜ்மில்லத் தெரு–1 | B |
| 180 | WD-20 | ரஹமத் நகர் சிராஜ்மில்லத் தெரு–2 | B |
| 181 | WD-20 | ரஹமத் நகர் சிராஜ்மில்லத் தெரு–3 | B |
| 182 | WD-20 | ரஹமத் நகர் சிராஜ்மில்லத் தெரு–4 | B |
| 183 | WD-20 | ரஹமத் நகர் சிராஜ்மில்லத் மெயின்ரோடு | B |
| 184 | WD-20 | ரஹமத் நகர் பள்ளிவாசல் தெரு | B |
| 185 | WD-20 | பழைய பட்டிணம் பாதை | B |
| 186 | WD-21 | பட்டிணத்தார் தெரு | B |
| 187 | WD-21 | பட்டிணத்தார் தெரு, மதர்சா பின்புறம் | B |
| 188 | WD-21 | பழைய பட்டிணம் பாதை | B |
| 189 | WD-21 | இப்ராஹிம் கார்டன் | B |
| 190 | WD-21 | கோரிதோப்பு | B |
| 191 | WD-21 | மரைக்காயர் தெரு 1 | B |
| 192 | WD-21 | மரைக்காயர் தெரு 2 | B |
| 193 | WD-22 | பர்கத் நகர் டேங்க் மெயின்ரோடு | A |
| 194 | WD-22 | பர்கத் நகர் மெயின்ரோடு | A |
| 195 | WD-22 | பர்கத் நகர் 2வது தெரு | A |
| 196 | WD-22 | பர்கத் நகர் 3வது  தெரு | A |
| 197 | WD-22 | பர்கத் நகர் 4வது தெரு | A |
| 198 | WD-22 | பர்கத் நகர் 5வது தெரு | A |
| 199 | WD-22 | பர்கத் நகர் 6வது தெரு | A |
| 200 | WD-22 | பர்கத் நகர் 8வது தெரு | A |
| 201 | WD-22 | பர்கத் நகர் 10வது தெரு | A |
| 202 | WD-22 | பர்கத் நகர் 11வது தெரு | A |
| 203 | WD-22 | பர்கத் நகர் 12வது தெரு | A |
| 204 | WD-22 | பர்கத் நகர் 13வது தெரு | A |
| 205 | WD-22 | மஸ்தான்குளம் | B |
| 206 | WD-23 | மாரியம்மன்கோயில் தெரு | B |
| 207 | WD-23 | ஈஸ்வரன் கோயில் தெரு | B |
| 208 | WD-23 | பழைய ஆரோவில் ரோடு | B |
| 209 | WD-23 | கன்னிகோயில் தெரு | B |
| 210 | WD-24 | செந்தாமரை தெரு | B |
| 211 | WD-24 | எம்.ஜி.ஆர் நகர் 1 & 3 | B |
| 212 | WD-24 | எம்.ஜி.ஆர் நகர் 2வது குறுக்கு தெரு | B |
| 213 | WD-24 | எம்.ஜி.ஆர் நகர் 4வது குறுக்கு தெரு | B |
| 214 | WD-24 | எம்.ஜி.ஆர் நகர் 5வது தெரு | B |
| 215 | WD-24 | எம்.ஜி.ஆர் நகர் 6வது குறுக்கு தெரு | B |
| 216 | WD-24 | எம்.ஜி.ஆர் நகர் 7வது குறுக்கு தெரு | B |
| 217 | WD-24 | எம்.ஜி.ஆர் நகர் 8வது குறுக்கு தெரு | B |
| 218 | WD-24 | கன்னியம்மன்கோயில் தெரு | B |

| | | | |
|---|---|---|---|
| 219 | WD-24 | பள்ளிவாசல் தெரு | B |
| 220 | WD-24 | பள்ளிவாசல் தெரு அய்மான் தெரு | B |
| 221 | WD-25 | சின்னகோட்டக்குப்பம் பாதை | B |
| 222 | WD-25 | சோமுதலியார் தோட்டம் 1வது தெரு | B |
| 223 | WD-25 | சோமுதலியார் தோட்டம் 2வது தெரு | B |
| 224 | WD-25 | சோமுதலியார் தோட்டம் 3வது தெரு | B |
| 225 | WD-25 | இசிஆர் புறவழிச்சாலை | A |
| 226 | WD-25 | அமைதி நகர் | B |
| 227 | WD-25 | ரெயின்போ கார்டன் | B |
| 228 | WD-25 | மேயர் ரத்தினவேலு பிள்ளை நகர் | B |
| 229 | WD-25 | காந்திரோடு (மகாத்மா காந்திரோடு முதல் பர்கத் நகர் டேங்க் ரோடு வரை) | A |
| 230 | WD-26 | குண்டுகிராமம் 1வது தெரு | B |
| 231 | WD-26 | குண்டுகிராமம் 2வது தெரு | B |
| 232 | WD-26 | குயவர் 1வது தெரு | B |
| 233 | WD-26 | குயவர் 1வது தெரு | B |
| 234 | WD-26 | மரைக்காயர் 3வது தெரு | B |
| 235 | WD-26 | மரைக்காயர் தோப்பு குறுக்கு தெரு–1 | B |
| 236 | WD-26 | முராது தெரு | B |
| 237 | WD-26 | பழைய பட்டிணம் பாதை | B |
| 238 | WD-26 | சர்தார் கார்டன் | B |
| 239 | WD-27 | அய்யனார் கோயில் மேடு | B |
| 240 | WD-27 | சோதனைக்குப்பம் கடற்கரை தெரு | B |
| 241 | WD-27 | சோதனைக்குப்பம் மேற்கு தெற்கு வடக்கு தெரு | B |
| 242 | WD-27 | சோதனைக்குப்பம் OHT | B |
| 243 | WD-27 | ரஹமத் நகர் (மிலாது தெரு) | B |
| 244 | WD-27 | ரஹமத் நகர் திப்பு சுல்தான் தெரு | B |
| 245 | WD-27 | ரஹமத் நகர் அல்லாபிச்சை தெரு | B |
| 246 | WD-27 | ரஹமத் நகர் ஹாஜி லத்திப் தெரு | B |
| 247 | WD-27 | ரஹமத் நகர் நூர்முஹம்மது தெரு | B |
| 248 | WD-27 | ஆசாத் தெரு | B |
| 249 | WD-27 | மரைக்காயர் தோப்பு 1வது தெரு | B |
| 250 | WD-27 | மரைக்காயர் தோப்பு 2வது தெரு | B |
| | | | |

**விடுபட்டுள்ள தெருக்கள் / சந்துக்கள்**

| வ. எண் | வார்டு எண் | தெரு பெயர்கள் | மண்டலம் |
|---|---|---|---|
| 1 | WD–13 | மேயர் சண்முகம் நகர் | B |
| 2 | WD–14 | ரோஸ்கார்டன் | B |
| 3 | WD–13 | சலாமத் நகர் | B |
| 4 | WD–2 | போகன்வில்லா | B |
| 5 | WD–8 | அபிஷேக் பார்ம் ஹவுஸ் | A |

| | | | |
|---|---|---|---|
| 6 | WD-01 | மீராம்பிகை கார்டன் | A |
| 7 | WD-01 | ஆரோகார்டன் | A |
| 8 | WD-05 | ரிவேரா வில்லா | A |
| 9 | WD-07 | மிலாது தெரு | B |
| 10 | WD-08 | ஸ்வர்ணபூமி அவென்யூ | A |
| 11 | WD-08 | ஹாஜி இப்ராஹிம் பாஷா அவென்யூ | B |
| 12 | WD-12 | டாக்டர் அப்துல்காலம் நகர் | B |
| 13 | WD-26 | முருங்கப்பிள்ளை தோட்டம் | B |

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மானம் எண். 10</u>**

அரசாணை பின்பற்றி அனுமதிக்கப்படுகிறது.

<u>பொருள் எண். 02</u>

கோட்டக்குப்பம் நகராட்சியில் கீழ்க்காணும் அத்தியாவசிய பணிகளை பொது மக்களின் நலன் கருதி இந்நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

| வ. எண் | பணியின் விபரம் |
|---|---|
| 1. | வார்டு எண்.1 முழுவதும் சாலை மற்றும் சைடு வாய்க்கால் அமைத்தல். |
| 2. | வார்டு எண்.2 ஆரோவில் ரோடு, மேற்குதெரு, வடக்குதெரு, கடற்கரை சந்து ஆகிய பகுதிகளில் வடிகால் அமைத்தல் |
| 3. | வார்டு எண்.3 குளத்தில் கழிவு நீரை அகற்றி வடிகால் மூலம் கடற்கரையில் சேர்த்தல் மற்றும் ஆதிதிராவிடர் காலனி அண்ணாநகர் பகுதியில் மண் சாலையை சிமெண்ட் சாலையாக அமைத்தல் |
| 4. | வார்டு எண்.4 கடற்கரை தெரு, தெற்கு தெரு. வடக்கு தெரு மற்றும் குறுக்கு தெரு ஆகிய பகுதியில் சாலை அமைத்தல் மற்றும் வலைப்பின்னும் கூடம் அமைத்தல் |
| 5. | வார்டு எண்.5 ராஜீவ் நகர் முழுவதும் சைடு வாய்க்கால் அமைத்து தருதல் பள்ளத்தெரு, மேட்டுதெரு தொடக்கம், மாரியம்மன்கோயில் எதிர் ரோடு ஆகிய மண் சாலையை மாற்றி புதிய சாலை அமைத்தல். |
| 6. | வார்டு எண்.6 எம்.ஜி.ஆர் நகர், சின்னமுதலியார்சாவடி காலனியில் சைடு வாய்க்கால் சரி செய்தல், சாலை வசிதி, மற்றும் குடிநீர் உப்புநீராக மாறியுள்ளதால் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்தல். |
| 7. | வார்டு எண்.7 இந்திரா நகர், பழைய பட்டிணபாதை, தந்திராயன்குப்பம் சுனாமி குடியிருப்பு ஆகிய பகுதிகளில் புதிய குடிநீர் குழாய் அமைத்தல். |
| 8. | வார்டு எண்.8 தென்னைந்தோப்பு, மாரியம்மன்கோயில் தெரு பகுதியில் சாலை அமைத்தல் மற்றும் கோட்டைமேடு பகுதியில் கழிப்பிடம் கட்டுதல். |
| 9. | வார்டு எண்.9 நடுக்குப்பம் பகுதியில் களம் அமைத்தல் மற்றும் மேகாத்தம்மன் கோயில் வடிகால் அமைத்தல், வடக்கு தெருவில் புதியதாக வலைபின்னும்கூடம் அமைத்தல் மற்றும் குடிநீர் பைப்லைன் அமைத்தல் . |
| 10. | வார்டு எண்.10 பொது கழிவறையை கழிவு நீர் தொட்டியை தற்போதுள்ள மக்கள் தொகைக்கு ஏற்றவாறு கழிவறையை தொட்டியை விரிவுப்படுத்தி தருதல், பழுதடைந்த சாலைகள், வடிகால்களை சரிசெய்தல் மற்றும் குடிநீர் பைப்லைன் அமைத்தல் |
| 11. | வார்டு எண்.11 பொது கழிவறையை கழிவு நீர் தொட்டியை தற்போதுள்ள மக்கள் தொகைக்கு ஏற்றவாறு கழிவறையை தொட்டியை விரிவுப்படுத்தி தருதல், |

| | |
|---|---|
| | பழுதடைந்த சாலைகள், வடிகால்களை சரிசெய்தல் மற்றும் குடிநீர் பைப்லைன் அமைத்தல் |
| 12. | 12வது வார்டு ஜமியத் நகர் சுனாமி குடியிருப்பு பகுதிகளில் வடிகால் வசதி மற்றும் மண் சாலைகளை புதியதாக சாலை அமைத்தல். |
| 13. | வார்டு எண். 13 நேதாஜி நகர், சத்யா நகர், ரோஸ் கார்டன் மற்றும் இருளர் குடியிருப்பு பகுதியில் சாலை அமைத்தல், பச்சை வாழியம்மன் நகர், சத்யா நகர், அரிஜனகாலனி பகுதிகளில் வடிகால் அமைத்தல் மற்றும் சரிசெய்தல் மற்றும் இடுகாடுப்பகுதியில் சுற்றுச்சுவர் அமைத்தல் மற்றும் இருளர் காலனி பகுதியில் கழிவறை அமைத்தல் |
| 14. | வார்டு எண்.14 அஜித் நகர், முகாம்பிகை நகர், முருகன் கோயில் தெரு மற்றும் தோப்பு தெரு, வண்ணாரத்தெரு ஆகிய பகுதியில் சாலை மற்றும் சைடு வாய்க்கால் அமைத்தல் மற்றும் சுப்ரமணியபுரம் பைப்லைன் மற்றும் சைடு வாய்க்கால் அமைத்தல் |
| 15. | வார்டு எண்.14 தோப்புத்தெரு அரிஜனகாலனி எதிரில் அமைத்து Steel Grading Kalvert சாலை மற்றும் சைடு வாய்க்கால் அமைத்தல். |
| 16. | வார்டு எண்.14 சத்யா நகர் OHT மேல்நிலை நீர்த்தேக்கதொட்டிக்கு ஒரு 40kv ஜெனரேட்டர் உடனடியாக அமைத்தல். |
| 17. | வார்டு எண்.16வது வார்டு புதுத்தெரு 1 முதல் 5வரை சைடு வாய்க்கால் மற்றும் உமர்புலவர் தெரு மற்றும் மாமூலப்பை தெரு வரை சாலை அமைத்தல். |
| 18. | வார்டு எண்.19 மோர்சார் தெரு தார் சாலை அமைத்தல். |
| 19. | வார்டு எண்.20 ஹாஜி உசேன் தெருவில் சைடு வாய்க்கால் சரி செய்தல் மற்றும் சிராஜ் மில்லத் தெரு 1, 2, 3 ஆகிய தெருவில் சாலை அமைத்தல். |
| 20. | வார்டு எண்.15 பர்கத் நகர் 7வது குறுக்கு தெரு மற்றும் அய்யூப் கார்டனில் சாலை மற்றும் சைடு வாய்க்கால் அமைத்தல் மற்றும் பர்கத் நகர் முதல் தெரு விரிவாக்கத்தில் குடிநீர் குழாய் அமைத்தல். |
| 21. | வார்டு எண்.22 பர்கத் நகரில் டேங்க் மெயின் ரோட்டில் உள்ள முதல் குறுக்கு தெரு, இரண்டாவது குறுக்கு தெருவில் புதியதாக சாலை அமைத்தல், பர்கத்நகர் 11வது தெருவில் புதிய வாய்க்கால் அமைத்தல் |
| 22. | வார்டு எண்.21 இப்ராஹிம் கார்டன் பகுதியில் சாலை மற்றும் வடிகால் அமைத்தல் மற்றும் கோரிதோப்பு பகுதியில் புதியதாக பைப்லைன் அமைத்தல். |
| 23. | வார்டு எண்.23 மாரியம்மன்கோயில் தெரு மற்றும் கன்னிக்கோயில் தெருவில் பழுதடைந்த வடிகால்கள் சரி செய்தல். |
| 24. | வார்டு எண்.25 சின்னகோட்டக்குப்பம் வேதாபாட சாலை வீதியில் உள்ள அனைத்து குறுக்கு தெருக்களில் வடிகால் அமைத்தல். |
| 25. | வார்டு எண்.26 சர்தார் கார்டன் முழுவதும் சாலை அமைத்தல் மற்றும் முராது வீதியில் மரைக்காயர் தெரு முழுவதும் சைடு வாய்க்கால் அமைத்தல். |
| 26. | வார்டு எண்.27 மிலாது தெரு, திப்புசுல்தான் தெரு, ஹாஜி உசேன் தெரு மற்றும் ரஹமத் நகர் மவுலானாதெரு, மரைக்காயர் தோப்பு ஆகிய பகுதிகளில் சைடு வாய்க்கால் அமைத்தல், |

<u>அலுவலக குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மானம் எண். 11</u>**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.3**

கோட்டக்குப்பம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16 தேரோடும் வீதி, பழைய பட்டிணப்பாதை, வார்டு எண்.18 பெரிய பள்ளிவாசல் தெரு, வார்டு எண்.19 நாட்டாண்மைகார தெரு, மோர்சார் தெரு, வார்டு எண்.20 ஹாஜி உசேன் தெரு வார்டு எண்.21 பட்டிணத்தார் தெரு மற்றும் வார்டு எண்.26 மரைக்காயர் தோப்பு ஆகிய பகுதிகளில் குடிநீர் பைப்லைன் 8 அடிக்கு கீழாக செல்வதால் பொதுமக்களுக்கு சரியான

முறையில் குடிநீர் விநியோகம் வழங்க இயலாத காரணத்தினால் அப்பகுதியில் புதியதாக பைப்லைன் அமைக்க இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

**<u>தீர்மானம் எண். 12</u>**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.4**

கோட்டக்குப்பம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 7, 9, 10 மற்றும் 11 ஆகிய பகுதிகளில் குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனை சரிசெய்யும் பொருட்டு கோட்டைமேடு வெள்ளவாரி ஓடை பகுதியில் புதியதாக ஆழ்துளை கிணறு, மின்மோட்டார் மற்றும் பைப்லைன் அமைத்து தந்திராயன்குப்பம் மற்றும் நடுக்குப்பம் பகுதிக்கு புதியதாக பைப்லைன் அமைக்கும் பணியினை இந்நகராட்சியின் பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

**<u>தீர்மானம் எண். 13</u>**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.5**

கோட்டக்குப்பம் நகராட்சிக்குட்பட்ட சின்னகோட்டக்குப்பம் வார்டு எண். 13, 14, 23, 24 மற்றும் 25 ஆகிய பகுதிகளில் குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டு பல்வேறு தெருக்களில் சீரான முறையில் குடிநீர் விநியோகம் செய்ய இயலாத காரணத்தினால் சின்னகோட்டக்குப்பம் ரோஸ்கார்டனில் புதியதாக ஆழ்துளை கிணறு மின்மோட்டார் மற்றும் பைப்லைன் அமைத்து அப்பகுதியில் குடிநீர் விநியோகம் செய்யும் பணியினை இந்நகராட்சியின் பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

**<u>தீர்மானம் எண். 14</u>**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.6**

கோட்டக்குப்பம் நகராட்சிக்குட்பட்ட சின்னகோட்டக்குப்பம் வார்டு எண். 16, 17, 18, 19, 20, 21, 26 மற்றும் 27 ஆகிய பகுதிகளில் குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டு பல்வேறு தெருக்களில் சீரான முறையில் குடிநீர் விநியோகம் செய்ய இயலாத காரணத்தினால் சின்னகோட்டக்குப்பம் மேயர் சண்முகம் நகர் பகுதியில் புதியதாக ஆழ்துளை கிணறு மின்மோட்டார் மற்றும் பைப்லைன் அமைத்து மேற்குறிப்பிட்டுள்ள பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யும் பணியினை இந்நகராட்சியின் பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

**<u>தீர்மானம் எண். 15</u>**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.7**

கோட்டக்குப்பம் நகராட்சிக்குட்பட்ட சின்னகோட்டக்குப்பம் வார்டு எண். 13, சத்யா நகர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு குடிநீர் ஏற்ற ஆழ்துளை கிணறு அமைக்கப்பட்டு பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. இவற்றிற்கு 20HP குதிரைதிறன் கொண்ட மின்மோட்டார் நகராட்சியின் பொது நிதியில் கொள்முதல் செய்துகொள்ள மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

**தீர்மானம் எண். 16**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.8**

கோட்டக்குப்பம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 15, பர்கத் நகர் தரைத்தள தொட்டியில் மின்மோட்டார் அமைக்கப்பட்டு அலுவலக மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு குடிநீர் ஏற்றப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது மின்மோட்டாரில் விசை திறன் குறைவு ஏற்பட்டுள்ளதால் அலுவலக மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு வரும் குடிநீரின் அளவு குறைவு ஏற்பட்டுள்ளது. ஆகையால் 20HP Sepcial type மின்மோட்டார் இந்நகராட்சியின் பொது நிதியில் கொள்முதல் செய்துகொள்ள மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

**தீர்மானம் எண். 17**

அனுமதிக்கப்பட்டது

**பொருள் எண்.9**

கோட்டக்குப்பம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15, பர்கத் நகர் தரைத்தள தொட்டியின் மூலம் அலுவலக மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு குடிநீர் ஏற்றப்பட்டு வார்டு எண். 15,16, 17, 18, 19, 20, 21, 22, 25, 26 மற்றும் 27 ஆகிய வார்டுகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மின்தடை ஏற்படும் நேரங்களில் இப்பகுதிகளுக்கு சரியான முறையில் குடிநீர் விநியோகம் செய்ய இயலவில்லை. ஆகையால் 40kv திறன்கொண்ட மின்னாக்கி மற்றும் மின்தடை ஏற்படும் நேரங்களில் அலுவலக பணிகள் பெரிதும் பாதிக்கப்படுவதால் அலுவலக உபயோகத்திற்கு 30kv திறன்கொண்ட மின்னாக்கி ஆகியவற்றை இந்நகராட்சியின் பொது நிதியில் கொள்முதல் செய்துகொள்ள மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும்.

**அலுவலக குறிப்பு**

**மன்றம் அனுமதிக்கலாம்**

**தீர்மானம் எண். 18**

அனுமதிக்கப்பட்டது

**(ஒம்) ச. ஜெயமூர்த்தி**
நகர்மன்றதலைவர்
கோட்டக்குப்பம் நகராட்சி

–/உண்மை நகல்/–

ஆணையாளர்
கோட்டக்குப்பம் நகராட்சி